**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS No. 88/2021**

18.06.2025

**<u>வா.சா.1 செல்வகணபதி த/பெ. நடராஜபிள்ளை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி .</u>**

பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். அவர் ஆசிரியராக கீவலூர் உள்ள கூரத்தான்குடி கிராமத்தில் உள்ள பள்ளியில் வேலை செய்து வருகிறார். புளிக்கரையில் என் தகப்பனார் மளிகை கடை வைத்திருந்தார். கார்த்திகேயனை எனக்கு நன்கு தெரியும் அவர் பிரதிவாதியின் நண்பர். கார்திகேயன் தான் கடன் வாங்க சொல்லி புளிக்கரைக்கு அழைத்து வந்தார் என்றால் இல்லை. நான் வருமானவரி செலுத்தி வருகிறேன். பிரதிவாதிக்கு எவ்வளவு கடன் கொடுத்தேன் என்றால் ரூ. 5 லட்சம் 20.02.2017 ல் கொடுத்தேன். கடன் கொடுத்ததற்கு புரோநோட்டு எழுதி வாங்கினேன். புரோநோட்டு தவிர வேறு ஆவணங்கள் வாங்கினேனா என்றால் பணத்தை திரும்பி கேட்கும்போது பிரதிவாதி காசோலை வாங்கினார். காசோலை கொடுக்கும்போது நான் பணம் கொடுக்கவில்லை. காசோலை பிரதிவாதி பணம் வாங்கிய 5 மாதம் கழித்து 23.07.2017 ல் காசோலையை கொடுத்தார். பணத்தை வங்கிலிருந்து எடுத்துகொடுத்தேனா என்றால் கையில் இருந்ததை கொடுத்தேன் வங்கியல் எடுக்கவில்லை. புரோநோட்டு தான் முதலில் வாங்கினேன் அதன் பின்பு தான் காசோலை வாங்கினேன். புரோநோட்டு எழுதிவாங்கும் சமயம் வாதி காசோலையை தருவதகாக சொன்னாரா என்றால் இல்லை. பிரதிவாதியிடமிருந்து 7 காசோலைகளை பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி அரசு ஊழியர் என்று தெரிந்து தான் கடன் கொடுத்தேன். பிரதிவாதி கடன் கொடுக்கும்போது 7 காசோலைகளை தவிர SBI Pass Book , ATM Card வாங்கிகொண்டேனா என்றால் இல்லை. ATM Card சேர்த்து அந்த கார்டுகுரிய ரகசிய எண்ணையும் பிரதிவாதி எனக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ATM Card பயன்படுத்தி விளமல் மற்றும் குளிக்கரை ஆகிய இடங்களில் உள்ள ATM ல் பணம் எடுத்துள்ளேன் என்றால் தவறாகும். பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனே ரூ. 2 லட்சம் தான் என்றாலும் நான் பொய்யாக ரூ. 5 லட்சம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய கடனுக்காக ரூ. 4 லட்சம் வரை கொடுத்துள்ளார் என்றால் தவறாகும். பிரதிவாதி ரூ. 4 லட்சம் பணம் கொடுக்கும்போது காசோலையும் ATM Card யையும் பிரதிவாதிக்கு கொடுக்க மறுத்தேன் என்றால் சரியல்ல. ரு. 30,000/- என் கணக்கில் செலுத்தியதாக பிரதிவாதி சொன்னால் ஆனால் எந்த தேதி என்று என்னிடம் சொல்லவில்லை. என்னுடைய கணக்கிற்கு ரூ. 30,000/- பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்பதற்கு வங்கி ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தேதி குறிப்பிட்டு சொன்னால் தாக்கல் செய்வேன். புரோநோட்டு யார் எழுதினார் என்றால்

பிரதிவாதி அழைத்துவந்தார் அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. அந்த நபர் கையெழுத்து போட்டாரா என்றால் கையெழுத்து செய்துள்ளார் என்ன பெயரில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் இளங்கோவன் என்ற பெயரில் கையெழுத்து செய்தார். வா.சா.ஆ. 1 பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டு ஆகும். எல்லா புரோநோட்டிலும் 2 கையெழுத்து பெறுவேன் என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. 2 வதாக ஒரு கையெழுத்து வாங்கியுள்ளேனா என்றால் தொகை கொடுத்து வரவு வைக்கப்பட்டது அதற்காக கையெழுத்து வாங்கினேன். எவ்வளவு பிரதிவாதி கொடுத்தார் என்றால் ரூ. 1000/- கொடுத்தார். ஒவ்வொரு புரோநோட்டு நான் 2 கையொப்பம் பெறுவேன் என்றாலும் வழக்கு புரோநோட்டு காலவதியாகிவிட்டதால் அதை மறைத்து நானே ரூ. 1000/- பெற்றுகொண்டதாக வரவு வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டு காலவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் பிரதிவாதியின் கையெழுத்தை இரண்டாவதாக நானே போட்டுள்ளேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு அவர் கணக்கில் சம்பளம் வந்தவுடன் நான் அவர் ATM மை பயன்படுத்தி நான் அவருடைய கணக்கிலிருந்து பணம் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.